

புதுக்கோட்டை மாநகராட்சி, இராஜகோபாலபுரம் 25வது வார்டு பகுதியில், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பெய்த கனமழையின் காரணமாக மழைநீரினை வெளியேற்றும் பணியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 14.10.2024 நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர்த.நாராயணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.10.44 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகள்!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், அக்.16 -

பெரம்பலூர் நகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் ரூ.10.44கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 20242025 ஆம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் 1,200 சதுர மீட்டர் பரப்பில் 1,000 வாகனங்களை நிறுத்தும் வகையில் மேற்கூரையுடன் கூடிய இருசக்கர வாகன நிறுத்தம் கட்டும் பணி, பேருந்து நிலையத்திற்குள் மழைநீர் தேங்காத வகையில் மழைநீர் வடிகால் வாய்க்கால்கள், உயர்மின் கோபுர விளக்குகள், பேவர்பிளாக் சாலை உள்ளிட்ட பணிகள் ரூ.473 லட்சம் மதிப்பில் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

அதேபோல, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.570.64 இலட்சம் மதிப்பீட்டில் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் 8.357 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலை புதுப்பிக்கும் பணியும், 7.567 கிலோ மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றும் பணிகளையும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று பள்ளிவாசல் தெரு பகுதியில் தொடங்கி வைத்தார்.

பின்னர் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களின் தேவைகளை அறிந்து தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். வடகிழக்குப்பருவ மழை காலத்தில் பொதுமக்களுக்கு எந்த சிரமங்களும் இல்லாத வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில், பெரம்பலூர் மாவட்டத்தில் போதிய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பெரம்பலூர் நகராட்சிக் குட்பட்ட அனைத்து வார்டு களிலும், எங்கெல்லாம் சாலைகள் பழுதடைந்துள்ளதோ அங்கு தார்ச்சாலைகளை மேம்படுத்திடவும், சிமெண்ட் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல மழைநீர் வடிகால்கள், கழிவு நீர் வாய்க்கால்கள தூர்வாரிடவும், மழைநீர் எங்கும் தேங்காத வகையில் நீர்வழிப்பாதைகளை தூர் வாரவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், குன்னம் வட்டம், பெருமத்தூர் வடக்கு ஊராட்சி, நல்லூர் கிராமத்தைச்சேர்ந்த திருமதி பார்வதி என்பவரின் பசுமாடு கடந்த 12.10.2024 அன்று பெய்த மழையில் எதிர்பாராதவிதமாக இடிதாக்கி இறந்து விட்டதால், அரசு நிவாரண நிதியில் இருந்து ரூ.37,500 வழங்குவதற்கான ஆணையினை பயனாளியிடம் போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.

நிவாரண நிதி பயனாளியின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண்நேரு, பெரம்பலூர் சட்டமன்ற ம.பிரபாகரன் நகர்மன்றத்தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் சி.இரஜேந்திரன், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ராஜ்குமார், பா துரைசாமி, நகர்மன்றத் துணைத்தலைர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர் , மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் தழுதாழைசி.பாஸ்கர், நகராட்சி ஆணையர் இராமர், பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன், பரமேஷ்குமார் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் நகராட்சி அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டையில்

# கனமழையின் காரணமாக மழைநீர் தேங்கியுள்ள இடங்கள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

புதுக்கோட்டை, அக். 16 -

புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், வடகிழக்கு பருவமழை முன்னிட்டு பெய்த கனமழையின் காரணமாக மழைநீர் தேங்கியுள்ள இடங்களை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் 14.10.2024 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையின் போது பொது மக்கள் பாதுகாப்பாக இருந்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். அந்த வகையில், சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரினை உடனடியாக கால்வாய்களில் சென்றடையும் வகையில் பணிகளை மேற்கொள்ளுதல், மழையினால் விழும் மரக்கிளைகளை உடனடியாக அப்புறப்படுத்துதல், மழைக் காலங்களில் மின் விநியோகத்தினை சீராக பொதுமக்களுக்கு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வடகிழக்கு பருவமழையானது அக்டோபர் மாதத்தில் தொடங்கி டிசம்பர் மாதம் வரை பெய்யக் கூடியது. அதன்படி பால்பண்ணை, இராஜகோபாலபுரம் 25வது வார்டு பகுதிகளில், வடகிழக்கு பருவமழை முன்னிட்டு பெய்த கனமழையின் காரணமாக மழைநீர் தேங்கியுள்ள இடங்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. புதுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்ட கட்டுப்பாட்டில் உள்ள மாநில நெஞ்சாலையான திருச்சி புதுக்கோட்டை அறந்தாங்கி மீமிசல் சாலை (SH 26) (மா.நெ.சா.26) கி.மீ. 50/8ல் (பால்பண்ணை பகுதி) உள்ள குழாய் பாலத்தின் அளவு குறைவாக உள்ளதால் மழைநீர் நிரம்பி சாலையில் சென்றுள்ளது. இவ்விடத்தில் உள்ள குழாய் பாலத்திற்கு பதிலாக 3 மீட்டர் X 2 மீட்டர் அகலமுள்ள 2 செல் பாக்ஸ் கல்வெர்ட் (2 Cells, 3m X 2m Box Culvert) கட்டுவதற்கு ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இராஜகோபாலபுரம் 25வது வார்டு பகுதியில் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் மழைநீர் செல்லும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

எனவே இப்பணிகள் அனைத்தையும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாக முடித்து பொது மக்களுக்கு எவ்வித சிரமமின்றி சரிசெய்திட வேண்டும். மேலும் கனமழையின்போது பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை உரிய முறையில் பின்பற்றிட வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மேயர் திலகவதி செந்தில் , புதுக் கோட்டை மாநகராட்சி ஆணையர் த.நாராயணன், செயற் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) தமிழழகன், உதவி செயற் பொறியாளர் பரதன், வட்டாட்சியர் பரணி, உதவிப் பொறியாளர் பிரவீன் மற்றும் புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், க.மதியழகன், சுப. சரவணன், செ.அசோக் பாண்டியன், தவ .பாஞ்சாலன், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.




திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணைநல்லூர் ஒன்றியம் ஏனாதிமங்கலம் எல்லீஸ் அணைக்கட்டு கரையோரப் பகுதியில் பனை விதைகளை நடும் பணிகளை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார்.மாவட்ட ஆட்சியர் சி பழனி, மண்டல வன அதிகாரி பெரியசாமி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட வன அதிகாரி சுமேஷ் சோமன், துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; குஜராத் மாநிலத்தில் 5,000 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதே ?

**பட்டணம் :** **ஆமாம் அய்யா; குஜராத் மாநிலம் அங்கலேஷ்வரில் உள்ள மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் இருந்து 5,000 கோடி ரூபாய் மதிப்புள்ள 'கோகைன்' என்ற போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இதுபோன்று அங்கே பலமுறை நடந்திருக்கிறது.**

**இந்த மாதிரி போதைப் பொருள் பறிமுதல் தமிழ்நாட்டில் நடந்திருந்தால், ஆளும் தி.மு.க. மீது, எடப்பாடி குழுவினர் எகிறிக் குதித்திருப்பார்கள்; பா.ஜ.க.வினர் பம்மாத்து காட்டியிருப்பார்கள்.**

**ஆனால் குஜராத்தின் ஆளுங்கட்சி பா.ஜ.க. ஆயிற்றே, ஏதும் அறியாததைப் போலப் பதுங்கிக் கொள்வார்கள் !**

### ஏரியூரில் மக்கள் தொடர்பு முகாம்!

# 149 பயனாளிகளுக்கு ரூ.60 லட்சத்தில் நல உதவிகள்!

## அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்!

சிவகங்கை. அக். 16 -

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, ஏரியூரில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத். துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் கலந்து கொண்டு பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 149 பயனாளிகளுக்கு 60 லட்சத்து 19 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட்வர்ஸ், திட்ட அலுவலர் முனைவர் சிவராமன், மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்தர பிரசாத், மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி நிர்வாக இயக்குனர் திருமதி உமா மகேஸ்வரி, கலால் ஆணையர் ரங்கநாதன், மாவட்ட சுகாதார அலுவலர் விஜய சந்திரன் சிங்கம்புணரி ஒன்றிய கழக செயலாளர் கே . பாலசுப்பிரமணியன் ,முன்னாள் ஒன்றிய செயலாளர்ஏ.எல்.சந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.



சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் 14.10.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.மலையரசன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் தா.பிரியதர்ஷினி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், இணை இயக்குநர் நலப்பணிகள் டாக்டர் பி.ராதிகா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.யோகானந்த், பேரூராட்சி தலைவர் பழனியம்மாள், துணை தலைவர் வெங்கடேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி சிவசங்கர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் பாலமுருகன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, பெரம்பலூர் சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி வருவாய் அலுவலர் க.ரமேஷ், வேப்பந்தட்டை அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், வேப்பந்தட்டை ஒன்றிய குழு பெருந்தலைவர் க.ராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், மகாதேவி ஜெயபால், ஆலை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.